ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2225/5 - 2021 අප්‍රේල් මස 27 වැනි අඟහරුවාදා - 2021.04.27

2225/5 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 27 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**6 ஆவது திருத்தம்**

**இலங்கை கணக்காளர் சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பு**

இல. 1695/15 மற்றும் 2011 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 01 ஆந் திகதிய, இல. 1865/36 மற்றும் 2014 ஆம் ஆண்டு யூன் மாதம் 06 ஆந் திகதிய, இல. 1981/99 மற்றும் 2016 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 27 ஆந் திகதிய, இல. 2070/7 மற்றும் 2018 ஆம் ஆண்டு மே மாதம் 09 ஆந் திகதிய, 2137/66 மற்றும் 2019 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 22 ஆம் திகதிய, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அதி விசேட வர்த்தமானி அறிவித்தல்களினால் திருத்தப்பட்ட, இல. 1670/33 மற்றும் 2010 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 10 ஆம் திகதி இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அதி விசேட வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட இலங்கை கணக்காளர் சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பு பின்வருமாறு திருத்தியமைக்கப்படுவதோடு, அதில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய விடயங்கள் மற்றும் நிபந்தனைகள் மாற்றமின்றி செயல்வலுப்பெறும்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் பணிப்பிற்கமைய,

எம்.ஏ.பீ. தயா செனரத்,
செயலாளர்,
அரசாங்க சேவை ஆணைக்குழு.

2021, மாச்சு 22.

7.2.2.1 கல்வித் தகைமைகள் :

(ii) இலங்கை தொழில்நுட்ப கல்லூரியில் / இலங்கை உயர் தொழில்நுட்ப நிறுவனத்தில்/ இலங்கை உயர் தொழில்நுட்ப கல்வி நிறுவனத்தில் கணக்கீடு அல்லது வர்த்தகம் பற்றிய உயர் டிப்ளோமாதாரியாக அல்லது உயர் தேசிய முகாமைத்துவ டிப்ளோமாதாரியாக இருத்தல் வேண்டும்.

(iii) இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்தில் அல்லது வேறு யாதேனுமொரு பொதுநலவாய நாட்டின் பட்டயம் பெற்ற கணக்காளர் நிறுவகமொன்றில் பட்டயம் II அல்லது இடைநிலைப் பரீட்சை அல்லது கணக்கீடு மற்றும் வியாபார சான்றிதழ் II அல்லது வியாபார மட்டப் பரீட்சை அல்லது வியாபார மட்டம் II பரீட்சை அல்லது அதிலும் உயர் மட்டத்திலான பரீட்சையொன்றில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

(viii) இலங்கை சான்றிதழ்பெற்ற முகாமைத்துவ கணக்காளர் நிறுவகத்தில் முகாமைத்துவ மட்டம் அல்லது அதிலும் உயர் மட்டத்திலான பரீட்சையொன்றில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

7.2.2.5 வேறு : பிரிவு (III) நீக்கப்படுகின்றது. ஏனைய விடயங்கள் மாற்றமின்றி செயல்வலுப்பெறும்.

7.2.4.1 எழுத்துமூலப் பரீட்சை : திறந்த பிரிவின் கீழ் ஆட்சேர்ப்பதற்கான எழுத்துமூலப் பரீட்சை தொடர்பான விடயங்கள் 1 ஆவது பின்னிணைப்பில் தரப்பட்டுள்ளது.
(7.2.4.1 இன் கீழ் தற்போதுள்ள அட்டவணை நீக்கப்படுகின்றது.)

7.3.2.5 வேறு :

(iii) பதவி உயர்வுக்காக தகைமைகளைப் பரிசீலிக்கும் தினத்தன்று அரசாங்க சேவை ஆணைக்குழுவின் சுற்றறிக்கை இல. 01/2020 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைவாக ஒழுக்காற்றுத் தண்டனை யொன்றைப் பெற்றிருத்தல் ஆகாது.

குறிப்பு:
இல. 1670/33 மற்றும் 2010.09.10 ஆம் திகதிய அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடப் பட்ட இலங்கை கணக்காளர் சேவை பிரமாணக் குறிப்பின் ஆங்கிலப் பிரதியில் பிரிவு இலக்கம் 7.3.2.6, 7.3.3 எனவும் 7.3.2.7, 7.3.3.1 எனவும் திருத்தப்படுகின்றது.

7.3.3.1 எழுத்துமூலப் பரீட்சை : மட்டுப்படுத்தப்பட்ட பிரிவின் கீழ் ஆட்சேர்ப்பதற்கான எழுத்துமூலப் பரீட்சை தொடர்பான விடயங்கள் 1 ஆவது பின்னிணைப்பில் தரப்பட்டுள்ளது.
(7.3.3.1 இன் கீழ் தற்போதுள்ள அட்டவணை நீக்கப்படுகின்றது.)

7.2.4.4.1, 7.3.3.4.1 மற்றும் 7.4.3.3.1 ஆகிய பிரிவுகளின் கீழ் பின்வரும் குறிப்பு உள்ளடக்கப்படுகின்றது.

*குறிப்பு :* இந்த நேர்முகப் பரீட்சை சபை அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் அரசாங்க உத்தியோகத்தர்கள் ஐவரைக் கொண்டிருக்கும்.

10.1 தரம் III இலிருந்து தரம் II க்கு பதவி உயர்வு

10.1.1.1 பூரணப்படுத்த வேண்டிய தேவைப்பாடுகள்

(v) பதவி உயர்வுக்காக தகைமைகளைப் பரிசீலிக்கும் தினத்தன்று அரசாங்க சேவை ஆணைக் குழுவின் சுற்றறிக்கை இல. 01/2020 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைவாக ஒழுக் காற்றுத் தண்டனையொன்றைப் பெற்றிருத்தல் ஆகாது.

10.2. தரம் II இலிருந்து தரம் I க்கு பதவி உயர்வு

10.2.1.1 பூரணப்படுத்த வேண்டிய தேவைப்பாடுகள்

(iii) பதவி உயர்வுக்காக தகைமைகளைப் பரிசீலிக்கும் தினத்தன்று அரசாங்க சேவை ஆணைக் குழுவின் சுற்றறிக்கை இல. 01/2020 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைவாக ஒழுக் காற்றுத் தண்டனையொன்றைப் பெற்றிருத்தல் ஆகாது.

15. ஏதேனும் வருடமொன்றில் சேவையின் தரம் III க்கு ஆட்சேர்க்கும் போது கடந்த ஆண்டின் திசெம்பர் 31 ஆந் திகதிக்கு அந்தத் தரத்தில் நிலவிய வெற்றிடங்களின் எண்ணிக்கை ஆட்சேர்க்கப்பட வேண்டிய தொகையாகக் கருதப்படும்.

தற்போதுள்ள 1 ஆவது பின்னிணைப்புக்குப் பகரமாக இந்த 1 ஆவது பின்னிணைப்பு பதிலீடு செய்யப்படுகின்றது.

## பின்னிணைப்பு 1

### இலங்கை கணக்காளர் சேவையின் ஆட்சேர்ப்புக்காக நடாத்தப்படும் திறந்த / மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை பற்றிய விபரம் :

01. பரீட்சைத் திட்டம் மற்றும் பாட விதானம்

அரசாங்க நிறைவேற்றுனர் வகுதியின் தரம் III இன் வெற்றிடங்களை நிரப்புவதற்கான பொதுப் போட்டிப் பரீட்சை இதற்கு ஏற்புடையதாகும். இந்தப் பரீட்சை, பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் வருடாந்தம் நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். இந்தப் போட்டிப் பரீட்சையின் முதலாம் பகுதியின் (பொதுப் பகுதி)

ஒவ்வொரு வினாப்பத்திரத்திலும் 40% க்கு மேல் மற்றும் மொத்தப் புள்ளிகள் 100 அல்லது அதற்கு மேல் புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளும் பரீட்சார்த்திகள் மாத்திரம் மேற்படி பரீட்சையின் இரண்டாவது பகுதிக்கு அழைக்கப்படுவர்.

(அ) அரசாங்க நிறைவேற்றுனர் வகுதியின் தரம் III இன் வெற்றிடங்களை நிரப்புவதற்காக நடாத்தப்படும் பொதுப் போட்டிப் பரீட்சையின் முதலாம் பகுதி (பொதுப் பகுதி)

**(I)** சாராம்சம்

| *வினாப்பத்திரம்* | *காலம்* | *வினாப்பத்திரத்தின் தன்மை* |
|---|---|---|
| 1. நுண்ணறிவுப் பரீட்சை | 1 ½ மணித்தியாலங்கள் | 100 புள்ளிகள், பல்தேர்வு வினாக்கள் மற்றும் / அல்லது சுருக்க வினாக்களைக் கொண்டிருக்கும். சித்திப் புள்ளிகள் 40 ஆகும். |
| கிரகித்தல் | 02 மணித்தியாலங்கள் | 100 புள்ளிகள், பல்தேர்வு வினாக்கள் மற்றும் / அல்லது சுருக்க வினாக்களைக் கொண்டிருக்கும். சித்திப் புள்ளிகள் 40 ஆகும். |

**(II)** பாட விதானம்

| **நுண்ணறிவுப் பரீட்சை** |
|---|
| பரீட்சார்த்தியின் தர்க்கிக்கும் ஆற்றல், பிரதியிடல், பொருட்கோடல், தொடர்பு காணல், பெயர்ப்பு, பிரச்சனைகளைத் தீர்க்கும் இயலுமை, காரண காரிய தொடர்புகளை புரிந்துகொள்ளல், எதிர்வுகூறல், தகவல்களை ஒழுங்கமைத்தல், வடிவங்களை இனங்காணல் மற்றும் ஆலோசனைகளை பின்பற்றுதல் முதலிய இயலுமைகளை அளவிடுவதற்காக வடிவமைக்கப்பட்ட பல்தேர்வு வினாக்களைக் கொண்டது. |
| **கிரகித்தல்** |
| பரீட்சார்த்தியிடம் காணப்படும் விடயங்களை புரிந்து கொள்ளும் இயலுமை, தொடர்பாடல் திறன், சாரம்சப்படுத்தல், விவரித்தல் மற்றும் ஆக்கத்திறன் ஆகிய திறன்களை அளவிட வடிவமைக்கப்பட்ட புறவய வினாக்களைக் கொண்டது. |

(ஆ) அரசாங்க நிறைவேற்றுநர் வகுதியின் தரம் III வெற்றிடங்களை நிரப்புவதற்காக நடாத்தப்படும் பொதுப் போட்டிப் பரீட்சையின் இரண்டாவது பகுதி (இலங்கை கணக்காளர் சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான விசேட பகுதி)

**(I)** சாராம்சம்

| *வினாப்பத்திரம்* | *காலம்* | *வினாப்பத்திரத்தின் தன்மை* |
|---|---|---|
| நிதி மற்றும் முகாமைத்துவக் கணக்கீடு | 3 மணித்தியாலங்கள் | 100 புள்ளிகள், சித்தியெய்துவதற்காகப் பெற்றுக் கொள்ள வேண்டிய புள்ளிகள் 40.<br>(வினாப்பத்திரம் இரண்டு பகுதிகளைக் கொண்டது.)<br>(பகுதி I இற்குரிய புள்ளிகள் 60 ஆகும்.<br>பகுதி II இற்குரிய புள்ளிகள் 40 ஆகும்) |
| உயர் கணக்காய்வு மற்றும் பொருளாதாரப் பகுப்பாய்வு | 3 மணித்தியாலங்கள் | 100 புள்ளிகள், சித்தியெய்துவதற்காகப் பெற்றுக் கொள்ள வேண்டிய புள்ளிகள் 40.<br>(வினாப்பத்திரம் இரண்டு பகுதிகளைக் கொண்டது.)<br>(பகுதி I இற்குரிய புள்ளிகள் 60 ஆகும்.<br>பகுதி II இற்குரிய புள்ளிகள் 40 ஆகும்) |

**(II) பாட விதானம்**

**நிதி மற்றும் முகாமைத்துவக் கணக்கீடு**

(இந்த வினாப்பத்திரம் 02 பகுதிகளைக் கொண்டது. 08 வினாக்களைக் கொண்டிருக்கும்.)

**பகுதி I – நிதிக் கணக்கீடு**

இந்தப் பகுதி ஐந்து (05) வினாக்களைக் கொண்டது. முதலாம் வினா கட்டாயமாகும். எஞ்சிய நான்கு (04) வினாக்களில் இரண்டை (02) தெரிவு செய்தல் வேண்டும். அனைத்து வினாக்களுக்கும் சமமான புள்ளிகள் வழங்கப்படும்.

1. கட்டாய வினா :

   இலங்கை கணக்கீட்டு நியமங்களின் பயன்பாடு தொடர்பில் பரீட்சார்திக்குள்ள ஆற்றலை அளவிடுவது இந்த வினாவின் மூலம் எதிர்ப்பார்க்கப்படுகின்றது. இந்த வினாவில் உப பகுதிகள் ஐந்து உள்ளதோடு, அனைத்து பகுதிக்கும் 04 புள்ளிகள் வழங்கப்படும்.

   இந்த வினா பின்வரும் இலங்கைக் கணக்கீட்டு நியமங்களை உள்ளடக்கியிருக்கும்.

   - நிதிக் கூற்றுக்கள் - இ.க.நி. 1
   - சொத்து, பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் - இ.க.நி. 16
   - வருவாய் - இ.க.நி. 18
   - காசுப் பாய்ச்சல் கூற்று - இ.க.நி. 7
   - பொருள் இருப்புகள் - இ.க.நி. 2
   - கணக்கீட்டுக் கொள்கைகள், கணக்கீட்டு மதிப்பீடுகளில் மாற்றங்கள் மற்றும் வழுக்கள் - இ.க.நி. 8
   - அறிக்கையிடப்படும் காலப்பகுதிக்குப் பின்னரான நிகழ்வுகள் - இ.க.நி. 10
   - குத்தகைகள் - இ.க.நி. 17
   - வருமான வரி - இ.க.நி. 12
   - நிதி ஏற்பாடுகள், எதிர்பாரா சொத்துக்கள் மற்றும் எதிர்பாரா பொறுப்புக்கள் - இ.க.நி. 37
   - நிதிச் சாதனங்கள் - இ.க.நி. 39

2. நிதிக் கூற்றுக்களுக்கான எண்ணக்கரு சார்ந்த மற்றும் ஒழுங்குமுறைக் கட்டமைப்பு

   நிதிக் கூற்றுக்களின் பொதுவான நோக்கம், பயன்படுத்தும் அனுமானங்கள், நிதிக் கூற்றுக்களின் தரநிலை பண்புகள், நிதிக் கூற்றுக்களின் மூலங்களை இனங்காணல் மற்றும் அளவிடுதல், மூலதன எண்ணக்கருக்கள் மற்றும் மூலதனப் பராமரித்தல் எண்ணக்கரு, நிறுவனக் கட்டுப்பாடுகள் சம்பந்தமான ஏற்பாடுகள், கம்பனிச் சட்டங்கள் மற்றும் இலங்கை பிணைகள் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகள்.

3. திரட்டிய நிதிக் கூற்றுக்கள் உள்ளிட்ட வரையறுக்கப்பட்ட கம்பனிகளின் நிதிக் கூற்றுக்கள்

   வரையறுக்கப்பட்ட பொறுப்புக் கம்பனியொன்றில் காணப்படும் நிதி மூலங்களினை அடையாளங் காணல், பங்குகள் மற்றும் தொகுதிக் கடன் பத்திரங்களை வழங்குதல் மற்றும் மீட்டல் தொடர்பான பேரேட்டுக் கணக்குகளைத் தயாரித்தல், முகாமைத்துவ மற்றும் வெளியீட்டு நோக்கங்களுக்காக நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல்.

4. இலாபமீட்டாத அமைப்புக்களுக்கான நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல்.

5. நிதிக் கூற்றுக்களின் பகுப்பாய்வு, நிதிபெறுபேறுகளின் வரைவிலக்கணம் மற்றும் தொடர்பாடல், நிதியல்லாத அறிக்கையிடல்

**பகுதி II – முகாமைத்துவக் கணக்கீடு**

இந்தப் பகுதி பின்வரும் விடயங்ளை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்படும் 03 வினாக்களைக் கொண்டிருக்கும். 02 வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும் ஒவ்வொரு வினாவுக்கும் சமமான புள்ளிகள் வழங்கப்படும்.

1. கிரய கணக்கீட்டு அம்சங்கள்

   கிரயங்களினை வகைப்படுத்தல், கிரயங்களின் நடத்தை, மதிப்பீடு செய்தல், மூலப்பொருட்கள் மற்றும் இருப்பு கட்டுப்பாடு, உழைப்பு கிரயம், குறிப்பிட்ட மற்றும் தொடர்ச்சியான கட்டளை கிரயவியல்

2. கிரயக் கணக்கீட்டு முறைகள்

உள்ளீட்டு கிரயவியல் மற்றும் எல்லை கிரயவியல், செயற்பாட்டு அடிப்படையிலான கிரயவியல், செயன்முறை கிரயவியல், உற்பத்திக் கணக்கீடு (Throughput Accounting) மற்றும் தற்கால முகாமைத்துவக் கணக்கீடு

3. வியாபாரத்திற்கான நிதிக் கணிதம் மற்றும் கருத்திட்ட மதிப்பீட்டு அடிப்படைகள், கூட்டுதல், தள்ளுபடி செய்தல்

4. நியமக் கிரயவியலும் முரண்கள் பகுப்பாய்வும்

5. வியாபாரச் செயற்பாடுகளுக்கான கணிதம்

6. வரவு செலவுத் திட்டமும் எதிர்வு கூறுதலும்
வரவு செலவுத் திட்டம், வரவு செலவுத் திட்டத் தயாரிப்பு மற்றும் வரவு செலவுத் திட்டக் கட்டுப்பாடுகள்

7. குறுகிய கால மற்றும் நீண்ட கால தீர்மானங்களை எடுப்பதற்கான தகவல், கிரயம் - அளவு - இலாபப் பகுப்பாய்வு, மேலதிக செயன்முறை விலையிடல் (Further Processing Cost) மற்றும் பல்வேறு நிதிக் கட்டுப்பாடுகளுக்கான முடிவுகளை எடுத்தல். (Multi-Constraint decision making)

8. தொழிற்படு மூலதன முகாமைத்துவம்

**உயர் கணக்காய்வு மற்றும் பொருளாதாரப் பகுப்பாய்வு**

(இவ்வினாப்பத்திரம் 02 பகுதிகளினைக் கொண்டிருப்பதுடன் எட்டு (08) வினாக்களை உள்ளடக்கியுள்ளது)

**பகுதி I - உயர் கணக்காய்வு**

இந்தப் பகுதி பின்வரும் விடயங்களை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்படும் 05 வினாக்களைக் கொண்டிருக்கும். 03 வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும் ஒவ்வொரு வினாவுக்கும் சமமான புள்ளிகள் வழங்கப்படும்.

1. பல்வேறு வகை கணக்காய்வுகளும் அக்கணக்காய்வுகளின் நோக்கங்களும்

நிதிக் கணக்காய்வு, முறைமை கணக்காய்வு, இணக்கப்பாட்டு கணக்காய்வு, பணத்திற்கான பெறுமதிக் கணக்காய்வு, செயல்திறன் கணக்காய்வு, தடயவியல் கணக்காய்வு, உள்ளக கணக்காய்வு, வெளியக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் கணக்காய்வு என்பன.

2. கணக்காய்வுத் திட்டமிடலும் கட்டுப்பாடும்

கணக்காய்வு திட்டமிடல், நேரம் குறித்தல், இடைக்கால மற்றும் இறுதிக் கணக்காய்வு, செயற்பாடுகளுக்குரிய பொறுப்புக்களினை ஒப்படைத்தல், உள்ளகக் கட்டுப்பாட்டுப் பயன்பாடு உள்ளடங்கலாக செய்யப்பட்ட வேலைகளைப் பதிவு செய்தல், உள்ளகக் கட்டுப்பாடு மதிப்பீட்டிற்கான வினாக் கொத்துக்களையும் படிவங்களையும் தயாரித்தல்.

3. தொழில்முறை நடத்தைகளும் நெறிமுறைகளும்

நேர்மை, கணக்காய்வுச் செயற்பாடுகள் தொடர்பான தகவல்களைத் திரட்டுதல், மதிப்பீடு செய்தல் மற்றும் தொடர்பாடல் விடயங்களுக்கு முன்னுரிமை வழங்கல், தகவல்களின் இரகசியத்தன்மை, தொழில்முறைக் கடப்பாடுகள், அறிவு, திறமைகள் மற்றும் அனுபவங்களினை பயன்படுத்துவதற்கான திறன்கள்

4. சட்ட உரிமைகளும் பொறுப்புகளும்

கணக்காளர் மற்றும் கணக்காய்வாளரினது சட்டரீதியான பொறுப்புகளும் அதனோடு இணைந்த சட்ட ஏற்பாடுகளும்

5. இடர் மதிப்பீடும் முகாமைத்துவத்திற்குமான நுட்பங்கள்

பல்வேறு வகையான இடர்கள், இடர் முகாமைத்துவச் செயல்முறை, இடர்களை முகாமைத்துவம் செய்வதற்கான நுட்பங்கள் மற்றும் சாதனங்களை அடையாளம் காணல்

6. கணக்காய்வு நியமங்கள்

சர்வதேச கணக்காய்வு நியமங்கள் (ISAs) மற்றும் இலங்கை கணக்காய்வு நியமங்கள் (SLAuSs)

7. உள்ளகக் கணக்காய்வுக் கடமைகள்

உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் கடமைகளினை இனங்காணல், உள்ளகக் கணக்காய்வினது நோக்கங்கள் மற்றும் கணக்காய்வுக் குழுக்கள்

8. சான்றுகளைச் சேகரித்தல்

சான்றுகளைச் சேகரிக்கும் வெவ்வேறு முறைகளை அடையாளம் காணல், மற்றும் ஆதாரங்களின் செல்லுபடித்தன்மையை உறுதி செய்தல்.

9. அறிக்கையிடல் தொழிற்பாடுகள்

அறிக்கைகளின் வகை, அறிக்கையிடும் நியமங்கள், கட்டமைப்பு, அறிக்கையிடும் செயல்முறை, கணக்காய்வு அபிப்பிராயங்கள் மற்றும் பின்தொடர்தல் செயல்முறை போன்றவை.

**பகுதி II – பொருளாதாரப் பகுப்பாய்வு**

இந்தப் பகுதி பின்வரும் விடயங்ளை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்படும் 03 வினாக்களைக் கொண்டிருக்கும். அதில் 02 வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும் ஒவ்வொரு வினாவுக்கும் சமமான புள்ளிகள் வழங்கப்படும்.

1. பேரண்ட பொருளாதார மாறிகளைப் புரிந்து கொள்ளல்

பேரண்ட பொருளாதார மாறிகளையும் முன்னணி வகிக்கும் குறியீடுகளையும் அடையாளம் காணல், பேரண்ட பொருளாதார மாறிகளை மதிப்பீடு செய்வதன் நோக்கம், பேரண்ட பொருளாதார மாறி களிடையே உள்ள தொடர்புகளும் தற்போதைய இலங்கை நிலவரத்தினை அடையாளம் காணலும்.

2. தேசிய வருமான நிர்ணயமும் தேசிய வருமானக் கணக்கீடும்

தேசிய வருமானத்தை அளவிடும் முறைகள், தேசிய வருமானத்தின் துறைகள் ரீதியான பங்களிப்பு, மூலதன நுகர்வும் மூலதன நுகர்வு மாற்றங்களும், அரச மற்றும் தனியார் நுகர்வுகள், தேசிய உற்பத்திகள் மற்றும் நலனோம்பு மற்றும் இவை தொடர்பிலான தற்போதைய இலங்கையின் நிலவரம்

3. சர்வதேச வர்த்தகமும் பொருளாதார அபிவிருத்தியும்

சர்வதேச வர்த்தகக் கோட்பாடுகள், சர்வதேச வர்த்தகம் மற்றும் பொருளாதார அபிவிருத்தி, சென்மதி நிலுவை, நாணயமாற்று வீத நடத்தைகள் மற்றும் தற்போதைய இலங்கை நிலவரம்.

4. வெளிநாட்டு நிதி, வெளிநாட்டு நேரடி முதலீடுகள், அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் கடன், நிலையான கடன் முகாமைத்துவம் மற்றும் இலங்கையின் தற்போதைய நிலவரம்.

5. மூலதனம் மற்றும் நிதிச் சந்தை, நிதி இடைத்தரகர்கள் மற்றும் நிதிக் கருவிகள்

6. நாணயக்கொள்கை

7. அரசிறைக் கொள்கை

02. பரீட்சையின் ஊடக மொழி

(i) இந்தப் பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலம் நடைபெறும்.

(ii) பரீட்சார்த்திகள் தாம் விரும்பும் ஒரு மொழியில் பரீட்சைக்குத் தோற்ற முடியும்.

(ii) பரீட்சார்த்திகள் இந்தப் பரீட்சையின் அனைத்து வினாப் பத்திரங்களுக்கும் தோற்ற வேண்டு மென்பதோடு, அதன் பொருட்டு ஒரு ஊடக மொழியை மாத்திரம் தெரிவு செய்தல் வேண்டும்.

(iv) பரீட்சார்த்தியொருவருக்கு தனது விண்ணப்பத்திலுள்ள பரீட்சைக்கான ஊடக மொழியை மாற்று வதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது.

03. நியமிப்பதற்காக தெரிவுசெய்யப்படும் முறை :

அனைத்து எழுத்துமூல வினாப்பத்திரங்களுக்குமான உரிய புள்ளிகளில் ஆகக் குறைந்தது 40% அல்லது அதற்கு மேல் புள்ளிகளைப் பெற்றுக்கொண்ட பரீட்சார்த்திகள் மாத்திரம் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். நேர்முகப் பரீட்சையில் தகைமைகளை உறுதிப்படுத்தும் விண்ணப்பதாரிகள், எழுத்துமூலப் பரீட்சையில் பெற்றுக்கொண்ட புள்ளிகளின் திறமை ஒழுங்கு முறை மற்றும் அரசாங்க நிறைவேற்றுனர் வகுதியின் தரம் III இன் வெற்றிடங்களை நிரப்புவதற்காக நடாத்தப்படும் பொதுப் போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்காக விண்ணப்பிக்கும் சந்தர்ப்பத்தில் அடையாளமிட்டுள்ள சேவை விருப்பத்திற்கு அமைய நியமிப்புச் செய்வதற்காக தெரிவுசெய்யப்படுவர்.

05 - 107

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.